**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGLAPATTU

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | CA.No.47/2023 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | திரு.விஜயகுமார் |
| Father's Name | : | திரு.திருவெங்கடாசம் |
| Taluk/Address | : | மாமண்டூர் |
| Age | : | 48 |
| Date | : | 03.02.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். இந்த வழக்கில் நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வட்டார வளர்ச்சி அலுவலகம், மதுராந்தகம் மற்றும் செங்கல்பட்டு காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களிடமிருந்து சில ஆவணங்களை பெற்றுள்ளேன். அதன் படி காவல் கண்காணிப்பாளர் செங்கல்பட்டு அவர்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்ட 14.06.2023 தேதியிட்ட மனு ரசீது பெற்றுள்ளேன். அது அ.சா.ஆ.10 (ஆட்சேபனையுடன்). மேலும் 08.03.2023 அன்று நான் காவல் கண்காணிப்பாளர் செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பிய கடித நகல் பெற்றுள்ளேன். அது அ.சா.ஆ.11 (ஆட்சேபனையுடன்). உதவி காவல் துணை கண்காணிப்பாளர், செங்கல்பட்டு அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான டில்லிபாபு என்கிற உதவி ஆய்வாளர் குற்ற எண்.134/2019 சட்ட பிரிவு 294(பி), 506(ii) வழக்கின் புலன் விசாரணையில் மெத்தனமாக இருந்துள்ளார் என்று குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையின் நகல் அ.சா.ஆ.12 (ஆட்சேபனையுடன்). அதனால் இந்த வழக்கின் புலன் விசாரணை குறைபாடுடன் செய்யப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டு காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணை அதிகாரியின் மீதும், அவருக்கு ஒத்துழைத்தவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யுமாறும், 30 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**